www.Padasalai.Net www.CBSEtips.in

TSI11T

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2022

வகுப்பு 11

நேரம்: 3.00 மணி **பொதுத்தமிழ்** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.

2. **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு: i) **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1) ''கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும் காலத்தால் அழியாத தொல் கனிமங்கள்''

அ) கபாடபுரங்களைக் - காவுகொண்ட

ஆ) காலத்தால் - கனிமங்கள்

இ) கபாடபுரங்களை - காலத்தால்

ஈ) காலத்தால் - சாகாத

2) பாயிரம் இல்லது ............. அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) களி ஈ) அமை

3) ஐங்குறுநூறு குறிப்பிடாத தமிழர்களின் நிலம் .............

அ) பனியும், பனி சார்ந்த நிலமும் ஆ) மலையும் மலை சார்ந்த நிலமும்

இ) காடும் காடு சார்ந்த நிலமும் ஈ) வயலும் வயல் சார்ந்த நிலமும்

4) மண்ணுக்கு வளம் சேர்ப்பன .............

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

5) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதிலிக் குருவிகள் - மரபுக்கவிதை

ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

இ) யானை டாக்டர் - குறும்புதினம்

ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

6) இறகுகளின் தொகுதியை ............. என்பர்.

அ) சிறகு ஆ) இறக்கை இ) தாழை ஈ) சாத்து

7) **கூற்று** : 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

**விளக்கம்** : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி.

இ) கூற்று தவறு, விளக்கம் சரி. ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு.

8) 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

9) எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று .............

அ) திருக்குறள் ஆ) குறுந்தொகை இ) நாலடியார் ஈ) சதுரகராதி

10) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:**

1. வெள்ளி-வீதியார் - புறநானூறு
2. அண்ணாமலையார் - வாடிவாசல்
3. இ.சு. செல்லப்பா - குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - காவடிசிந்து

11) துன்பப்படுபவர் .............

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காத்தவர் ஈ) நாவைக் காவாதவர்

12) பிள்ளைக்கூடத்தின் பாடத்திட்டம் .............

அ) தொழிற்கல்வி ஆ) சமத்துவக்கல்வி

இ) இயற்கைக்கல்வி ஈ) உடற்கல்வி

13) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் .............

அ) நற்றிணை ஆ) பரிபாடல் இ) குறுந்தொகை ஈ) அகநானூறு

14) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

## பகுதி - II

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15) பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்திமிக்கது ஏன்?

16) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

17) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை நிறுவுக.

18) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினை மட்டும் எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

20) தொழுஉரம் என்றால் என்ன?

21) ''கோட்டை'' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

### பிரிவு - 3

**குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதியைக் கூறி எழுதுக:**

அ) தண்டுடை ஆ) புவியாட்சி

24) இறைச்சி, உள்ளுறை - விளக்கம் தருக.

25) பாயிரம் விளக்குக.

26) **ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) ஈன்ற ஆ) வருகின்ற

27) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**

ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

www.Padasalai.Net

28) மாச்சீர், விளச்சீர் எவை? எழுதுக.

29) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க (ஏதேனும் ஒன்று):**
தாமரை, வைகை

30) **வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக:**
அனைத்து துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

## பகுதி - III

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31) ''சலச வாவியில் செங்கயல் பாயும்'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32) புகழுக்குரிய பண்புகளாக நீவிர் அறிவன யாவை? புகழின் பெருமையை குறள்வழி நிறுவுக.

33) தமிழ் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

34) நாச்செற்று விக்குளமேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும் - **இக்குறட்பாவை அலகிடுக.**

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்கு சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37) அனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகளில் இடம்பெற்ற செய்திகளை விவரிக்கவும்.

38) சமணப்பள்ளிகளும், பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**குறிப்பு: எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** **3×4=12**

39) சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்று காட்டி விளக்குக.

40) ஏதேனும் ஒரு பழமொழியினை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதிக் காட்டுக.

41) இயற்கை அல்லது நிலா என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதிடுக.

42) **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**
**(மதி, இதழ், கம்பு, வளை, சினை, ஆழி)**

1. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ..................
2. அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ..................
3. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவே தான் ..................
4. பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ..................

43) **தமிழாக்கம் தருக:**

1. Union is strength.
2. Work is workship.
3. No joy without alloy.
4. One flower makes no garland.

www.Padasalai.Net

43) **காது கேளாதவர்களுக்கான மாற்று வினா:**

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இன்மையானது, 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்னு பிங்கல நிகண்டு குறிக்கும். 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்ற பெயரிலும் வழங்கியுள்ளனர்.

''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' என்ற பாடலடியில் தமிழ் என்னும் சொல் ''பல்கலைப் புலமை'' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. கம்பர், ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்னும் இடத்து 'தமிழ்' அழகும், மென்மையும் என்ற பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்ற பொருளில் ஆளப்படுகிறது. முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் ''தமிழ் மாலை'' என்றே குறிப்பிடுகிறார்.

**வினாக்கள்:**

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒருவரியில் எழுதுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

## பகுதி - IV

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3×6=18**

44) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றி செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

**(அல்லது)**

திருமலை முருகன் பள்ளு இலக்கியத்தில் தென்கரை, வடகரை இயற்கை வளங்களைக் குறிப்பிடுக.

45) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுக்க.

**(அல்லது)**

வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

46) உங்கள் ஊரில் சுகாதார கேட்டை சரிசெய்து தரும்படி மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

இன்றைய காலக்கட்டத்தில் 'முதியோர் இல்லங்கள் அதிகரிப்பதற்கான காரணங்களை பட்டியலிடுக.

## பகுதி - V

47) **அடிபிறழாமல் எழுதுக:** **4+2=6**

அ) ஏடு தொடக்கி - எனத் தொடங்கும் பாடல்.

ஆ) 'வடு' என முடியும் குறள்.

---------

சிவக்குமார்.மு. ஸ்ரீராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
வல்லம்- 627 809.